## திருநெல்வேலி மாவட்டத்திற்கான வேளாண் வானிலை ஆலோசனை அறிக்கை

**(செப்டம்பர் 2-ம் தேதி முதல் செப்டம்பர் 6-ம் தேதி வரை)**

**(வெளியீடு: வேளாண் வானிலை ஆலோசனை மையம், வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம், கோவில்பட்டி மற்றும் இந்திய வானிலை துறை)**

**முந்தைய வார வானிலை (28.8.15- 31.8.15)**

| | |
|---|---|
| மழை (மி.மீ.) | 0.0 |
| அதிக பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 38 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 25- 26 |
| வானம் (ஆக்டா) | 2- 3 |
| ஈரப்பதம் (08:30 மணி) (சதவீதம்) | 59- 61 |
| ஈரப்பதம் (17:30 மணி) (சதவீதம்) | 41- 46 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) | 0- 2 |
| காற்றின் திசை | 0- 320 |

**6.9.15 அன்று 08:30 மணியுடன் முடிவடையும் காலத்திற்கான வானிலை முன்னறிவிப்பு**

| வானிலை காரணிகள் | வானிலை முன்னறிவிப்பு | | | | |
|---|---|---|---|---|---|
| | நாள் 1 2.9.15 | நாள் 2 3.9.15 | நாள் 3 4.9.15 | நாள் 4 5.9.15 | நாள் 5 6.9.15 |
| மழை (மி.மீ.) | 1 | 2 | 3 | 12 | 12 |
| அதிகபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 38 | 38 | 38 | 37 | 37 |
| குறைந்தபட்ச வெப்பநிலை (டிகிரி செல்சியஸ்) | 26 | 26 | 26 | 25 | 25 |
| வானம் (ஆக்டா) | 5 | 5 | 5 | 6 | 6 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 40- 58 | 42- 58 | 42- 59 | 44- 60 | 44- 60 |
| காற்றின் வேகம் (கி.மீ. / மணி) மற்றும் திசை | 2/ வடக்கு | 2/ வடக்கு | 2/ வடக்கு | 2/ வடக்கு | 2/ வடக்கு |

வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் அதிகமான மேகமூட்டம், இலேசான மழை மற்றும் மிதமான ஈரப்பதம் கொண்ட வானிலைக்கேற்ற வேளாண் வானிலை ஆலோசனைகள்

| பயிர்/ சாகுபடி சூழல் | பருவம்/ சாகுபடி செயல்கள் | வேளாண் வானிலை ஆலோசனை |
|---|---|---|
| நெல் | பசுந்தாள் உரமிடல் | நெற்பயிருக்கு பசுந்தாள் உரமிடுவது உரத்தேவையை குறைக்கவும் மண்வளத்தை மேம்படுத்தவும் உதவும். வரும் செப்டம்பர் -அக்டோபர் பருவத்தில் சாகுபடி செய்யப்படும் நெற்பயிருக்கு ஊட்டச்சத்துக்களை அளிக்க பசுந்தாள் உரப்பயிரான தக்கைப்பூண்டினை 20 கிலோ/ எக்டர் என்ற அளவில் விதை அளவை பயன்படுத்தி விதைக்கவும். |

| | | |
|---|---|---|
| | | |
| தக்காளி | பூக்கும் மற்றும் காய்க்கும் பருவம் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மிதமான மேகமூட்டம் மற்றும் ஈரப்பதம் கொண்ட வானிலையில் தக்காளில் காணப்படும் காய்த்துளைப்பானை கட்டுப்படுத்த இன்டோக்சாகார்ப் 14.5% SC **8** மி.லி./ **10** லிட்டர் அல்லது பாசலோன் 35 % EC **13** மி.லி./ **10** லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| வாழை | குலை தள்ளும் பருவம் | குலைதள்ளும் பருவத்திலுள்ள வாழைக்கு மகசூலை மேம்படுத்த வளர்ச்சி ஊக்கி பிளான்டோசைன் **2** மில்லி/ லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும். |
| சப்போட்டா | காய்க்கும் பருவம் | காய்க்கும் பருவத்திலுள்ள சப்போட்டா மரத்திற்கு தேவையான உரங்களை இடவும். **5** வயதுக்கு மேற்பட்ட மரத்திற்கு தொழுஉரம் **50** கிலோ, யூரியா **2.2** கிலோ, சூப்பர் பாஸ்பேட் **6.25** கிலோ மற்றும் பொட்டாஷ் **1.6** கிலோ என்ற அளவில் மரத்தின் அடிப்பகுதியிலிருந்து **45** செ.மீ. தள்ளி இடவும். |
| வடகிழக்கு பருவமழை பருவ சாகுபடி | நிலம் தயாரித்தல் | வரும் தினங்களில் எதிர்பார்க்கப்படும் மழையை பயன்படுத்தி வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் மானாவாரியில் பயிர் சாகுபடி செய்வதற்கு ஏதுவாக மானவாரி நிலங்களை உழவு செய்யவும். |

குறுஞ்செய்தி-: மழை: செப்டம்பர் **2- 6**ம் தேதி வரை: **1, 2, 3, 12& 12** மி.மீ. தக்காளி- காய்த்துளைப்பான்- இன்டோக்சாகார்ப் 14.5% SC **8** மி.லி./**10** லிட்டர் தெளிக்கவும்.

பேராசிரியர் மற்றும் தலைவர்
வேளாண்மை ஆராய்ச்சி நிலையம்
கோவில்பட்டி